# இன்றைய வேளாண் செய்திகள்

## சென்னையில் பரவலாக மழை

தென்மேற்கு வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளதால் தமிழகம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது. சென்னையில் பல இடங்களில் இரவு முழுவதும் மழை பெய்தது. இதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. தென் மாவட்டங்களில் நீர்நிலைகள் நிரம்பி வருகிறது.

## இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்பு

தமிழகம், புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியதாவது: வங்கக் கடலில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை கடந்த சில நாள்களுக்கு முன்பு உருவானது. இதன் காரணமாக, தமிழகத்தின் தென் கடலோர மாவட்டங்களில் பரவலாக மழை பெய்து வருகிறது. இதன் தொடர்ச்சியாக, சென்னை மாநகரின் பல இடங்களில் புதன்கிழமை மழை பெய்தது. வியாழக்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில், கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் அதிகபட்சமாக 80 மி.மீட்டர் மழை பதிவாகியுள்ளது. அதேபோல் குன்னூரில் 70 மி.மீ, திருநெல்வேலி மாவட்டம் பாபநாசத்தில் 50 மி.மீ, திருவள்ளூர் மாவட்டம் மாதவரத்தில் 40 மி.மீ, நீலகிரி மாவட்டம் கோத்தகிரி, திருநெல்வேலி மாவட்டம் சிவகிரி, அம்பாசமுத்திரத்தில் தலா 30 மி.மீட்டரும், காஞ்சி புரம் மாவட்டம் மாமல்லபுரம், கோவை மாவட்டம் பெரியநாயக்கன் பாளையம், சிவகங்கை, அறந்தாங்கி, பாளையங் கோட்டை ஆகிய இடங்களில் தலா 20 மி.மீட்டர் மழை பதிவாகியுள்ளது. முன்னறிவிப்பு:

வங்கக் கடலில் உருவான குறைந்தக் காற்றழுத்தத் தாழ்வு நிலையானது, தற்போது தென் மேற்கே இலங்கை, தமிழக கடல் பகுதிக்கு இடையே நிலை கொண்டுள்ளது. இதனால், தமிழகம், புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். தென் தமிழகம், உள் தமிழகத்தில் பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னையைப் பொருத்தமட்டில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யும். இருப்பினும், அடுத்து வரும் நாள்களில் படிப்படியாக மழை குறையும்.

## விவசாயிகள் நெல்விதைப் பண்ணைகளை அமைக்க அதிகாரி அறிவுறுத்தல்

விவசாயிகள் நெல் விதைப் பண்ணைகளை அமைத்து பயன்பெறலாம் என மாவட்ட விதைச்சான்று உதவி இயக்குநர் எஸ்.எஸ். சேக் அப்துல்லா தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: ராமநாதபுரம் மாவட்டத்தில் நடப்பு வடகிழக்குப் பருவமழை போதுமான தாக கிடைத்துள்ளதை தொடர்ந்து விதைக்கப்பட்ட நெல் மற்றும் சிறு தானியங்கள் 60 முதல் 75 நாள்கள் பயிராக உள்ளன. வேளாண்மைத் துறை மற்றும் தனியார் உரிமம் பெற்ற விதை விற்பனையாளர்கள் மூலம் பெறப்பட்ட ஆதார விதைகளைக் கொண்டு ராமநாதபுரம் மாவட்டத்தில் இதுநாள் வரை நெற்பயிரில் 292 ஹெக்டேரில் விதைப்பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆதார விதைகளைக் கொண்டு நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் விதைத்த 35 நாள்கள் அல்லது பயிர் பூப்பதற்கு 15 நாள்கள் இவற்றில் எது முன்னதாக வருகிறதோ அதற்குள் நெல் விதைப்பண்ணையை பதிவு செய்ய வேண்டும். விவசாயிகள் விதைப் பண்ணைகளாக பராமரிப்பதால் பயிர்களின் எண்ணிக்கை, சீரான பயிர் வளர்ச்சி, ஒரே நேரத்தில் பூத்து முதிர்தல் மற்றும் கலப்படம் இல்லாத அதிக மகசூல் மற்றும் விளைபொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்க வாய்ப்புள்ளது. நெல்சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு

விதை கிராமதிட்டத்தின் கீழ் 3 கட்டமாக பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதனால் அந்தந்த கிராமப் பகுதிகளில் விவசாயிகளுக்கு தங்களால் விதைக்கப்படும் தரமான விதைகளை உள்ளூர் விவசாயிகளுக்குள் பரிமாறிக் கொள்ள உதவியாக இருக்கும். நெல் சாகுபடிக்கு உகந்த சூழ்நிலை காணப்படுவதாலும் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெற்பயிர்கள் நன்கு வளர்ந்துள்ளதாலும் விவசாயிகள் நெல் விதைப்பண்ணைகளை அமைத்து விதை உற்பத்தியாளர்களாக மாறுவதன் மூலம் அதிக லாபம் பெறவும் வாய்ப்புள்ளது. நெல் மற்றும் சிறுதானியப் பயிர்களுக்கு வயலாய்வுக் கட்டணம், விதைப்பு அறிக்கை பதிவுக் கட்டணம் மற்றும் விதை பரிசோதனைக் கட்டணம் ஒரு ஏக்கருக்கு ரூ.115 செலுத்த வேண்டும். நெல் விதைப்பண்ணை அமைப்பது தொடர்பாக கூடுதல் தகவல்களுக்கு ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள விதைச் சான்று உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளுமாறும் இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குருங்குளத்தில் 33 மி.மீ. மழை

தஞ்சாவூர் மாவட்டத்தில் அதிகபட்சமாக குருங்குளத்தில் 33 மி.மீ. மழை பெய்தது. மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை முதல் பரவலாக மழை பெய்து வருகிறது. வியாழக்கிழமை காலை 8.30 மணியுடன் முடிந்த 24 மணிநேரத்தில் பெய்த மழையளவு (மில்லி மீட்டரில்): குருங்குளம் 33, வல்லம் 32.5, வெட்டிக்காடு 31.8, திருக்காட்டுப்பள்ளி 23.8, திருவையாறு 15.6, பேராவூரணி 12.8, பூதலூர் 10.2, பட்டுக்கோட்டை 9, அதிராம் பட்டினம் 8.1, கல்லணை 6.8, அணைக்கரை 6.4, பாபநாசம் 5, தஞ்சாவூர் 3, மதுக்கூர் 2.6, ஈச்சன்விடுதி 2.4, ஒரத்தநாடு 1.9, நெய்வாசல் தென்பாதி 1.2, கும்பகோணம், திருவிடைமருதூர் தலா 1.

## ஒருங்கிணைந்த பண்ணைத் திட்டத்துக்கு ரூ. 1.57 கோடி ஒதுக்கீடு

ஒருங்கிணைந்த பண்ணைத் திட்டத்துக்காக மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியில் ரூ. 1.57 கோடி மானியமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

என்றார் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது. பெரம்பலூர் மாவட்டம், வேப்பூர் வட்டாரம் மிகவும் பின்தங்கிய ஒன்றியமாக உள்ளதை மேம்படுத்தும் வகையில், ஒருங்கிணைந்த பண்ணைத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்துக்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பயனாளிகளுக்கு திட்டத்தின் நோக்கம், செயல்பாடுகள் குறித்து விளக்கக் கூட்டம் வேப்பூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது. இதில் பங்கேற்ற ஆட்சியர் மேலும் பேசியது: தமிழகத்தி லேயே மிகவும் பின்தங்கிய ஒன்றியமாக உள்ள வேப்பூரை முன்னேற்றும் வகையில் தமிழ்நாட்டில் முதல்முறையாக வேப்பூர் வட்டாரத்துக்கு மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியில் ஒருங்கிணைந்த பண்ணைத் திட்டத்துக்காக ரூ. 1.57 கோடி மானியமாக நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்துக் காக வேப்பூர் ஒன்றியத்தில் 189 பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, பயிர் சாகுபடி செயல் விளக்கத்துக்கு ரூ. 15,000, 2 கறவை மாடுகளுக்கு ரூ. 66,000, 30 நாட்டுக்கோழி வாங்குவதற்கு ரூ. 5,000, 11 வெள்ளாடுகள் வாங்குவதற்கு ரூ. 30,000, சாண எரிவாயு கலன் அமைப்பதற்கு ரூ. 20 ஆயிரம், மண்புழுத் தொட்டி அமைப்பதற்கு ரூ. 25,000 என ஒரு நபருக்கு ரூ. 1.61 லட்சம் வழங்கப்பட உள்ளது. இதில், 50% மானியத் தொகையாக ரூ. 80,500 வழங்கப்படும். மீதமுள்ள 50% தொகை விவசாயிகள் தங்களது பங்குத்தொகையாக (ரூ. 80,500) செலுத்த வேண்டும். விவசாயிகளின் பங்குத் தொகையை செலுத்தும் வகையில் பெரம்பலூர் சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா வங்கி மூலம் கடனுதவி வழங்கவும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. இத்திட்டம் செயல்படுத்தப்படுவதன் மூலம் 2 ஆண்டுகளில், வேப்பூர் வட்டாரம் முன்னேறிய வட்டாரம் என்ற நிலையை அடைவதற்கு விவசாயிகளின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமானதாகும் என்றார் ஆட்சியர். இதில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) இரா. கனகசபை, கால்நடை பராமரிப்புத் துறை துணை இயக்குநர் தங்கராஜ், பெரம்பலூர் சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா வங்கி மேலாளர் ராமச்சந்திரன், தோட்டக்கலை துணை இயக்குநர் (பொ) மா.

இந்திரா, வேப்பூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மனோகர், இணை இயக்குநர் வே. அழகிரிசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## "பட்டுப்புழு விதை தொழில்நுட்பங்களை விவசாயிகள் பயன்படுத்த வேண்டும்'

புதிய பட்டுப்புழு விதை தொழில்நுட்பங்களை விவசாயிகள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் வலியுறுத்தினார். பெங்களூருவில் உள்ள தேசிய பட்டுப் புழு விதை நிறுவனம், சேலம் மண்டல பட்டு வளர்ப்பு ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவை இணைந்து கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் பட்டு வளர்ப்பு விவசாயிகளுக்கான பயிற்சி முகாமை புதன்கிழமை நடத்தியது. முகாமை தொடக்கிவைத்து மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் பேசியது: பட்டு வளர்ப்பு தொழிலானது குறைந்த செலவில் நல்ல லாபம் தரக் கூடிய விவசாயத் தொழிலாக உள்ளது. பட்டுப்புழு கூடுகள் மகசூலுக்குத் தேவையான பல்வேறு காரணிகளில் முட்டைப் புழுவின் தரமே அடிப்படையாகும். பட்டுப்புழு விதை தொழில்நுட்பத்தை விவசாயிகள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தோட்டக்கலை துறை விவசாயிகளுக்கு சாதமான நிலை நிலவுவதைப் போல, பட்டு வளர்ப்பு தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கும் சாதமான நிலை உள்ளது என்றார். முன்னதாக, பட்டுப்புழு விதைக் கூடுகள் உற்பத்தி நவீன தொழில்நுட்பங்கள் குறித்த புத்தகத்தை ஆட்சியர் வெளியிட்டார். முகாமில், தேசிய பட்டுப்புழு விதை நிறுவனத்தின் இயக்குநர் பி.எஸ்.அங்கடி, சேலம் மண்டல பட்டுப் புழு வளர்ப்பு ஆராய்ச்சி நிலையத்தின் விஞ்ஞானிகள் சிக்கன்னா, எஸ்.ராஜ்குமார், ஜே.ரவிக்குமார், கிருஷ்ணகிரி பட்டு ஆராய்ச்சி விரிவாக்க மைய விஞ்ஞானி பாலசரஸ்வதி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### சின்ன வெங்காயத்தில் நுனிக்கருகல் தோட்டக்கலை அதிகாரிகள் ஆய்வு

ராசிபுரம் : சின்ன வெங்காயத்தில், நுனிக்கருகல் நோய் பரதிப்பு குறித்து, விவசாயிகளுக்கு செயல் விளக்க தடுப்பு முறையை, அதிகாரிகள் செய்து காட்டினர். ராசிபுரம் வட்டாரத்தில், பரவலாக சின்னவெங்காயம் சாகுபடி உள்ளதால், அப்பயிரில் நுனிக்கருகல் நோய் பாதிப்பு ஏற்படுகிறது, அதனை கட்டுப்படுத்துவது குறித்து, சிங்களாந்தபுரம், போடிநாயக்கன் பட்டி கிராமத்தில், வேளாண் அதிகாரிகள் செயல்விளக்கம் செய்து காண்பித்தனர்.தோட்டக்கலை உதவி இயக்குனர் மோகன் விஜயகுமார், தோட்டக்கலை உதவி வேளாண்மை அலுவலர் கிருஷ்ணன் மற்றும் துணைத் தோட்டக்கலை அலுவலர் ஆகியோர், விவசாயிகளுக்கு நுனிக்கருகல் நோய் பாதிப்பு தடுப்பு குறித்து எடுத்துக் கூறினர். மேலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, நோய் தடுப்பு முறைகள், மற்றும் அரசின் நலத்திட்ட உதவிகள் குறித்தும் எடுத்து கூறப்பட்டது.

### இலவச ஜப்பானிய காடை வளர்ப்பு பயிற்சி

நாமக்கல் : "ஜப்பானிய காடை வளர்ப்பில், நவீன தொழில்நுட்பம் குறித்த ஒரு நாள் பயிற்சி வகுப்பு, நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் நடக்கிறது' என, திட்ட ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: நாமக்கல்-மோகனூர் சாலையில் அமைந்துள்ள கால்நடை மருத்துவக் கல்லூரியின், வேளாண் அறிவியல் நிலையத்தில், ஜப்பானிய காடை வளர்ப்பில் நவீன தொழில்நுட்பம் குறித்த ஒரு நாள் இலவச பயிற்சி வகுப்பு, வரும், 18ம் தேதி, காலை, 9 மணிக்கு நடக்கிறது. மேலும், விபரங்களுக்கு 04286-266 244 என்ற தொலைபேசி எண்ணில், வரும், 17ம் தேதிக்கு முன்னதாக, தங்களது

பெயரை நேரிலோ அல்லது, ஃபோன் மூலமாகவோ பதிவு செய்து கொள்ளலாம்.இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**<u>3,475 டன் யூரியா வருகை: லாரி மூலம் அனுப்பிவைப்பு</u>**

ஈரோடு : ஆந்திர மாநிலத்தில் இருந்து வந்த யூரியா மூட்டைகள், லாரி மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. நெல் உள்ளிட்ட பல்வேறு பண பயிர்கள் வளர்ச்சிக்கு, பிரதானமாக இருப்பது யூரியா. தமிழகத்தில், ஒரே நேரத்தில் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள விவசாய நிலங்களிலும், பண பயிர்கள் நடவு செய்யப்பட்டதால், யூரியாவுக்கான தேவை அதிகரித்தது. எனவே, சில பகுதிகளில் பற்றாக்குறை உருவானது. யூரியா தட்டுப்பாடு இன்றி விவசாயிகளுக்கு, தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம் மூலம் வழங்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டது. இந்நிலையில் வெளிநாட்டில் இருந்து கப்பல் மூலம், விசாகப்பட்டினம் துறைமுகத்துக்கு வந்த யூரியா மூட்டைகள், லாரிகள் மூலம் தனியார் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இதுகுறித்து வேளாண்மை இணை இயக்குனர் செல்வராஜ் கூறும் போது, தனியார் மூலம் விற்க, 2,144 டன்னும், தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் மூலம் விற்க, 1,330 டன் யூரியா வந்துள்ளது. இவற்றை எந்தெந்த சங்கங்களுக்கு, எவ்வளவு விகிதம் அனுப்பி வைக்க வேண்டும் என்று, "டான்ஃபிட்' ஊழியர்களுக்கு அறிவுறுத்தி உள்ளேன். தேவை அடிப்படையில், லாரிகள் மூலம் யூரியா அனுப்பி வைக்கப்படுகிறது. பரவலாக அனைத்து பகுதிக்கும், யூரியா அனுப்பப்படுவதால், தட்டுப்பாடு வராது. மேலும் யூரியா விற்பனை குறித்து தீவிரமாக கண்காணித்து வருகிறோம். கடைகள், சங்கங்களுக்கு சராசரியாக, ஒருவருக்கு எத்தனை மூட்டைகள் வழங்க வேண்டும் என்று, அறிவுறுத்தி உள்ளோம். எனவே முறைகேடு நடப்பதற்கு வாய்ப்பு இல்லை, என்றார்.

## விவசாயிகள் சபை செயற்குழு கூட்டம்

ஈரோடு : "எம்-4' கீழ்பவானி முறைநீர் பாசன விவசாயிகள் சபை செயற்குழு கூட்டம், நசியனூரில் நடந்தது. தலைவர் பெரிய வேலப்பன் தலைமை வகித்தார். அடுத்த மாதம் மார்கழி போகத்துக்கு ஒற்றைப்படை மதகு பகுதிக்கு புன்செய் பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடக்கோரி, அரசுக்கு பொதுப்பணித்துறையினர் பரிந்துரை செய்ய வேண்டும். அரசு தண்ணீர் திறக்கும் தேதியை, முன் கூட்டியே அறிவிக்க வேண்டும். "எம்-4' பாசன பகுதியில் உள்ள காரை வாய்க்கால் மற்றும் "மதகு டாப்' மிகவும் பழுதடைந்து விட்டதால், அவற்றை சரி செய்து கொடுக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டன.

## ரூ. 2 லட்சத்துக்கு வாழைத்தார் ஏலம்

திருச்சி: திருசெந்துறையில் செயல்பட்டு வரும், ஒருங்கிணைந்த வாழை வளாகத்தில், 19வது வாரமாக ஏலம் நடந்தது. ஏலத்துக்கு மண்ணநச்ச நல்லூர், கிளியநல்லுார், சிறுகாம்பூர், கொடியாளம், போதாவூர், கோவளத்தெரு, பெட்டவாய்தலை, காட்டுபுத்துார், குணசீலம், வேலாயுதம்பாளையம், தஞ்சை மாவட்டம் ஒரத்தநாடு, ஈச்சாங்கோட்டை ஆகிய இடங்களில் இருந்து 40 விவசாயிகள், 3,558 வாழைத்தார்களை ஏலத்துக்கு கொண்டு வந்தனர். ஏலத்துக்கு, 2,933 பூவன் தார்களும், 192 ரஸ்தாளி தார்களும், 143 மொந்தன் தார்களும், 281 கற்பூரவள்ளி தார்களும், ஒன்பது பச்சை நாடான் வாழைத்தார்கள் வந்தது. சேலம், நாமக்கல், ஈரோடு, திண்டுக்கல், ஆட்டையாம்பட்டி, திருச்செங்கோடு, பண்ணப்பட்டி, நெய்தலூர், சிறுக மணி, சித்தலவாய் உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து, 11 வியாபாரிகள் ஏலத்தில் பங்கேற்றனர். அதிகப்பட்சமாக, ஒரு பூவன்தார் 225 ரூபாய்க்கும், ரஸ்தாளி, 320 ரூபாய்க்கும், மொந்தன், 195 ரூபாய்க்கும், கற்பூரவள்ளி, 160 ரூபாய்க்கும், பச்சைநாடான், 215 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தமாக, இரண்டு

லட்சத்து ஆயிரத்து, 495 ரூபாய் மதிப்பில் ஏலம் நடந்தது. அடுத்த வாழைத்தார் ஏலம் வரும், 16ம் தேதி காலை, 11 மணிக்கு ஒருங்கிணைப்பு வாழை வளாகத்தில் நடக்கிறது.

## விவசாயிகளுக்கு வழங்க 1,300 டன் உரம் வருகை

திருச்சி: திருச்சி உள்ளிட்ட நான்கு மாவட்ட விவசாயிகளுக்கு வழங்குவதற்காக, வெளி மாநிலத்தில் இருந்து, 1,340 டன் பாக்டம்பாஸ் உரம் ரயில் மூலமாக, திருச்சி குட்ஷெட்டுக்கு வந்துள்ளது. திருச்சி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில், சம்பா நெல் சாகுபடி செய்யப்பட்டு உள்ளது. விவசாயிகளுக்கு வழங்கும் பொருட்டு, வெளிநாடு மற்றும் வெளி மாநிலங்களில் இருந்து யூரியா, பொட்டாஷ், கலப்பு உரங்கள் ரயில் மூலம் கொண்டு வரப்பட்டது. நேற்று காலை, திருச்சி குட்ஷெட்டிற்கு கொண்டு வரப்பட்ட, 1,340 டன் பாக்டம்பாஸ் 20-20-0-15 (அமோனியம் பொட்டாஷியம் சல்பேட்) உரங்கள், லாரிகள் மூலம், பல்வேறு மாவட்டங்களுக்கு பிரித்து அனுப்பிவைக்கப்பட்டது.

## விதைப்பண்ணைகளில் வேளாண்துறையினர் ஆய்வு

பழநி : பழநிபகுதியில் அமைக்கப்பட்டுள்ள பயறுவகை விதை பண்ணைகளை வேளாண் உதவி இயக்குனர் சாந்தாமணி ஆய்வு செய்தார். சான்றுபெற்ற தரமான விதைகளை வினியோகம் செய்யும் நோக்கத்துடன் பழநிபகுதியில் வேளாண்துறை மூலம் விவசாயிகளை தேர்வு செய்து ஆதாரவிதை ஏக்கருக்கு 8 கிலோ என்ற அளவில் வழங்கி பண்ணைகள் அமைக்கும் முறைகளை பற்றிய பயிற்சி, செயல் விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. இவ்வாண்டு 2,500 ஏக்கரில் உளுந்து சாகுபடி செய்யப்படவுள்ளது. இதற்காக அமரப்பூண்டியில் 30 ஏக்கரில் அமைந்துள்ள விதைபண்ணைகளை வேளாண் உதவி இயக்குனர் சாந்தாமணி, உதவி விதை அலுவலர்கள் உத்தப்பன், சரவணன், சசிக்குமார் ஆய்வு செய்தனர். உதவி இயக்குனர் சாந்தாமணி

கூறுகையில்: தொழில்நுட்பங்களை பயன்படுத்துவது மூலம் ஏக்கருக்கு 500 முதல் 600 கிலோ வரை மகசூல் கிடைக்கும். அறுவடைக்கு பின் விதைகளை காயவைத்து, ஒவ்வொரு பண்ணையிலிருந்தும் விதை மாதிரிகள் எடுத்து ஆய்விற்காக திண்டுக்கல் சான்று அலுவலகத்திற்கு அனுப்பப்படும். சான்றுபெற்ற விதைகள் என பகுப்பாய்வு பெறப்பட்ட பின் வேளாண் துறை மூலம் விதை கொள்முதல் செய்து, ஊக்கதொகை வழங்கப்படும்,' என்றார்.

## <u>சோத்துப்பாறை அணை இரண்டாம் முறையாக மறுகால் பாய்கிறது: விவசாயிகள் மகிழ்ச்சி</u>

பெரியகுளம் : சோத்துப்பாறை அணை இந்தாண்டு இரண்டாம் முறையாக நிரம்பி மறுகால் பாய்கிறது. விவசாயிகள் மகிழ்ச்சி யடைந்துள்ளனர். வடகிழக்கு பருவமழையின் கொடையால் கொடைக்கானல் மலைப்பகுதிகளில் மழை நீர் வரத்தாலும், சோத்துப்பாறை அணையின் நீர் மட்டம் இது வரை 17 வது முறையாக அக்., 17ம் தேதி நிரம்பியது. மீண்டும் நேற்று டிச.,11 ல் 18 வது முறையாக நிரம்பியுள்ளது. சோத்துப்பாறை அணை 2001ம் ஆண்டு பாசனத்திற்கு திறக்கப்பட்டது. 2005, 2012, 2013 மற்றும் 2014 ம் ஆண்டு முறையே அணை இருமுறை நிரம்பியது. இது வரை 18 முறை நிரம்பியுள்ளது. முதல் பதிவு: 2001ம் ஆண்டு முதல் முறையாக பாசனத்திற்கு திறந்து விடப்பட்ட நிலையில், ஒவ்வொரு முறையும் அணை நிரம்பும் போதும் அதிகபட்சமாக ஒரு வாரத்திற்குள் பாசனத்திற்கு நீர் திறந்து விடப்படும். நீர் வரத்தும் குறைந்து விடும் சில தினங்களிலே மறுகால் பாய்வது நின்றுவிடும். இது தான் பொதுப்பணித்துறையின் பதிவு. ஆனால் இதற்கு மாறாக விவசாயிகளுக்கு மகிழ்ச்சியூட்டும் விதமாக தற்போது நடப்பாண்டில் அக்.,17ல் அணை நிரம்பி மறுகால் பாய்ந்தது.அக்.,23ல் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது.டிச.,

6ம் தேதி வரை 50 நாட்கள் மாறுகால் பாய்ந்தது முதல் முறையாகும். பயன்பெறும் பகுதிகள்: அணையில் நீரினால் பழைய ஆயக்கட்டு பகுதிகளான பெரியகுளம், தாமரைக்குளம், பாப்பிபட்டி கண்மாய்களில் உள்ள ஆயிரத்து 825 ஏக்கர் பரப்பளவில் உள்ள விவசாய நிலங்களும். புதிய ஆயக்கட்டு பகுதிகளான லட்சுமிபுரம் பகுதிகளில் உள்ள ஆயிரத்து 40 ஏக்கர் பரப்பளவில் விவசாய நிலங்களும் பயன்றுபெறும். நூற்றுக்கணக்கான கிணறுகளின் நீர் மட்டம் உயரும்.

## <u>தென்னை விவசாயிகளுக்கு காப்பீடு திட்டம் அறிவிப்பு</u>

உச்சிப்புளி : உச்சிப்புளி வேளாண் உதவி இயக்குனர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கை: தென்னை காப்பீடு திட்டத்தில் சேர விரும்பும் விவசாயிகள் தென்னையை ஊடுபயிராகவோ, தனி பயிராகவோ பலன் தரும் 5 மரங்கள் சாகுபடி செய்திருக்க வேண்டும். எக்டேருக்கு 175 மரங்கள் மட்டும் காப்பீடு செய்யலாம். நடப்பாண்டில் எந்த தேதியில் பிரிமியம் செலுத்தப்படுகிறதோ, அதற்கு அடுத்த மாதம் முதல் தேதியில் இருந்து ஓராண்டுக்கு பாலிசி வழங்கப்படும். பாலிசி துவங்கி ஒரு மாதத்திற்குள் ஏற்படும் பாதிப்பிற்கு இழப்பீடு வழங்கப்பட மாட்டாது. காப்பீடு தொகையில் 25 சதவீதத்தை விவசாயிகள் செலுத்த வேண்டும். பாதிக்கப்பட்ட 15 நாட்களுக்குள் வேளாண் காப்பீடு நிறுவனத்திற்கு தெரிவிக்க வேண்டும். காப்பீட்டு திட்டத்தில் சேர வேளாண் விரிவாக்க மையத்தில் வழங்கப்படும் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து பிரிமியத் தொகை செலுத்த ஆக்ஸிஸ் வங்கியில் சென்னையில் மாற்றத்தக்க வகையில் டி.டி., எடுத்து தென்னை சிட்டா அடங்கல் இணைத்து, வேளாண் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**<u>குமரி மாவட்டத்தில் மீண்டும் சாரல் மழை</u>**

நாகர்கோவில் : குமரி மாவட்டத்தில் சில நாட்கள் இடைவெளிக்கு பின்னர் மீண்டும் சாரல்மழை பெய்ய தொடங்கியுள்ளது, மாவட்டம் முழுவதும் பரவலாக இந்த மழை பெய்து வருகிறது, மாவட்டத்தில் அதிக பட்சமாக முள்ளங்கினாவிளையில் 18 மி.மீ. மழை பதிவானது. திற்பரப்பில் 12 மி.மீ. மழை பதிவானது. சாரல் மழையால் பள்ளி செல்லும் மாணவ மாணவிகள் சிரமப்படுகின்றனர். மாவட்டத்தின் முக்கிய அணையான பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் 45 அடியாக உள்ளது. பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 75.09 அடியாக உள்ளது. எனினும் அணை நீர்பிடிப்பு பகுதிகளில் மழை இல்லை என்று பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>சூரிய கூடார உலர்த்திகள் அமைக்க விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியம் கலெக்டர் தகவல்</u>**

திருவண்ணாமலை,: சூரிய கூடார உலர்த்திகள் அமைக்க விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியம் வழங்கப்பட உள்ளதாக கலெக்டர் ஞானசேகரன் தெரிவித்துள்ளார். திருவண்ணாமலை கலெக்டர் ஞானசேகரன் விடுத்துள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது: சூரிய சக்தி மூலம் வேளாண் உற்பத்தி பொருட்களை உலர்த்துவது மற்றும் பதப்படுத்துவது ஆகியவற்றை செயல்படுத்திடலாம். சூரிய சக்தி பயன்பாட்டினை விவசாயிகள் மற்றும் விவசாய குழுக்கள் மேற்கொள்ள ஊக்குவிக்கும் வகையில் 50 சதவீத மானியத்தில் சூரிய கூடார உலர்த்தி

கள் நிறுவப்பட்டு வேளாண் பதப்படுத்துதல், மதிப்பு கூட்டுதல் ஆகியவை வேளாண்மை பொறியியல் துறை மூலம் மேற்கொள்ள தமிழக அரசால் உத்தரவிடப்பட்டுள்ளது. சூரிய கூடார உலர்த்திகள் ரூ.4 லட்சம் மதிப்பீட்டில் சுமார் 400 சதுர அடி அளவில் அமைக்கப்படும். இந்த உலர்த்திகள் மூலம் வாழைப்பழம், தக்காளி, தேங்காய், காய்கறி மற்றும் பழவகைகளை பதப்படுத்தி மதிப்பு கூட்டுதல் செய்ய இயலும். மேற்காணும் சூரிய கூடார உலர்த்திகள் அமைக்க மதிப்பீட்டில் 50 சதவீதம் மானியம் வழங்கப்படும். தனியார் விவசாயி அல்லது ஏற்கனவே இயங்கி வரும் விவசாய குழுக்கள் ஆகியவை இதற்கு விண்ணப்பிக் கலாம். சூரிய கூடார உலர்த்திகள் அமைக்க விரும்பும் திருவண்ணா மலை, போளூர், செங்கம், தண்டராம்பட்டு, கலசபாக்கம் பகுதி விவசாயிகள் திருவண்ணாமலை வேங்கிக்கால் பசுவண்ணநகரில் உள்ள உதவிசெயற்பொறியாளர் (வேளாண்மை பொறி யியல்) அலுவலகத்திலும், ஆரணி, செய்யாறு, வந்தவாசி பகுதி விவசாயிகள் ஆரணி சைதாப்பேட்டை கார்த்திகேயன் சாலையில் உள்ள உதவி செயற்பொறியாளர் அலுவலகத்திலும் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறுஅவர் அதில் கூறி உள்ளார்.

## <u>வரத்து குறைந்ததால் பச்சை மிளகாய் விலை உயர்வு</u>

சேலம், : சேலம் மார்க்கெட்டிற்கு வரத்து குறைந்ததால் பச்சை மிளகாய் விலை உயர்ந்துள்ளது. இதனால் ஒரு கிலோ பச்சை மிளகாய் ரூ 35க்கு விற்பனை செய்யப்படுகிறது. சேலம் மார்கெட்டிற்கு தமிழகத்தின் தலைவாசல், பண்ருட்டி ஆகிய பகுதிகளிலிருந்தும், கர்நாடகத்தின் பெங்களூரிலிருந்தும் அதிகளவிலான பச்சை மிளகாய் விற்பனைக்கு வருகிறது. கடந்த மாதம் அப்பகுதிகளில் பெய்த மழையால், சேலத்திற்கு வரும் பச்சை மிளகாயின் வரத்து அதிகரித்து காணப்பட்டது. இதனால் விலை குறைத்து விற்பனை செய்யப்பட்டது. கடந்த மாதத்தில் சேலம் மார்க்கெட்டிற்கு 8 டன் ஆக இருந்த பச்சை மிளகாய் தற்போது 5 டன் அளவிற்கு குறைந்துள்ளது. இதனால் கடந்த இரு வாரத்திற்கு முன் கிலோ

ரூ 22 வரை இருந்த பச்சை மிளகாய் தற்போது விலை அதிகரித்து கிலோ ரூ 35க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதுகுறித்து பச்சை மிளகாய் வியாபாரிகள் கூறுகையில், “சேலம் மார்க்கெட்டுக்கு வரும் பச்சை மிளகாயின் வரத்து குறைந்தால் அதன் விலை அதிகரிக்க தொடங்கியுள்ளது. வரத்து மீண்டும் அதிகரிக்கும் பட்சத்தில் அடுத்த இரண்டு வாரங்களில் விலை குறைய வாய்ப்புள்ளது“ என்றனர்.

## <u>மானாவாரி பயிர் சாகுபடி அதிகரிப்பு</u>

ஈரோடு, : ஈரோடு மாவட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக மழையளவு குறைந்ததால் மானாவாரி பயிர்களான ராகி, சோளம், கம்பு, ஆமணக்கு, எள், நிலக்கடலை, மக்காச்சோளம் போன்றவற்றின் சாகுபடி வெகுவாக குறைந்தது. குறிப்பாக பசுந்தீவனங்களின் விளைச்சல் குறைந்ததால் கால்நடை வளர்ப்பு தொழிலும் நலிவடைந்தது. இந்நிலையில் ஈரோடு மாவட்டத்தில் பரவலான மழை பெய்ததால் மானாவாரி பயிர் சாகுபடி அதிகளவில் நடைபெற்று வருகிறது. குறிப்பாக சோளம், கம்பு, ராகி, நிலக்கடலை போன்றவற்றின் சாகுபடி பரப்பு கணிசமாக உயர்ந்துள்ளது. அவல்பூந்துறை, விளக்கேத்தி, ராட்டைசுற்றிபாளையம், முள்ளாம்பரப்பு போன்ற பகுதிகளில் மானாவாரி பயிர் சாகுபடி அதிகரித்துள்ளது. இதே போல் பசுந்தீவனங்களான சோளத்தட்டு போன்றவற்றின் விளைச்சலும் அதிகரித்துள்ளதால் பசுந்தீவன தட்டுப்பாடு குறைந்தது. இந்த ஆண்டு பெய்த மழையாலும், பாசன வாய்க்கால்களில் திறந்து விடப்பட்ட தண்ணீராலும் பெரும்பாலான விளை நிலங்களில் விவசாய தொழில் அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு கடும் வறட்சியால் கால்நடைகளை வளர்க்க முடியாமல் ஆடு, மாடுகளை விற்கும் சூழ்நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டனர். ஆனால் இந்த ஆண்டு தாராளமாக பசுந்தீவனம் கிடைப்பதால் கால்நடை விற்பனை குறைந்து விட்டது. இதுகுறித்து மானாவாரி விவசாயிகள் கூறுகையில், மானாவாரி பயிர்களான சோளம்,

கம்பு, ராகி, மக்காச்சோளம் போன்றவற்றை விளைய வைத்து அறுவடை செய்ததும் மீதமுள்ளவற்றை கால்நடைகளுக்கு தீவனமாக கொடுப்போம். இதே போல் நிலக்கடலை, எள் அறுவடை செய்ததும் செடிகளை நிலத்திலேயே மக்க விட்டு விடுவோம். இவை பசுந்தாள் உரங்களாக மாறி நிலத்தின் வளத்தை பெருக வைக்கும். மானாவாரி பயிர் சாகுபடி அதிகரித்தாலே பஞ்சம் குறைந்து போனதாக கருதலாம். அந்த வகையில் இந்த ஆண்டு மானாவாரி பயிர் சாகுபடி அமோகமாக உள்ளதால் மானாவாரி பயிர்களால் கணிசமான லாபமும் கிடைத்துள்ளது என்றனர்.

**<u>மீண்டும் துவங்கியது மழை இரண்டு நாட்கள் நீடிக்க வாய்ப்பு வானிலை ஆராய்ச்சி மையம் தகவல்</u>**

கோவை, : கோவை மாவட்டத்தில் கடந்த ஒரு மாதமாக வட கிழக்கு பருவமழை பெய்து வந்தது. இந்நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு பருவநிலையில் ஏற்பட்ட சில மாற்றங்கள் காரணமாக வடகிழக்கு பருவமழையின் தீவிரம் குறைந்து வெயிலின் தாக்கம் அதிகரிக்க தொடங்கியது. இதன் காரணமாக கடந்த ஒரு வாரத்திற்கும் மேலாக கோவை மாவட்டத்தில் வெயில் அதிகமாக காணப்பட்டது. இந்நிலையில் கோவையை குளிர்விக்கும் வகையில் மாவட்டத்தின் பல பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு இடியுடன் கூடிய கனமழை பெய்தது. குறிப்பாக கோவை நகர பகுதி, தொண்டாமுத்தூர், கிணத்துக்கடவு, சூலூர், காரணம்பேட்டை, பேரூர், சின்னதடாகம், உள்ளிட்ட பகுதிகளில் கனமழை பெய்தது. இதனால் சாலைகளின் ஓரங்களில் மழைநீர் தேங்கி குளம்போல் காட்சி அளித்தது. பல இடங்களில் சாக்கடை கால்வாய்கள் அடைத்து மழைநீருடன் வெளியேறியது. மாநகராட்சி பணியாளர்கள் இதனை சீரமைக்கும் பணியில் ஈடுபட்டனர். இது குறித்து வேளாண்மை பல்கலையில் இயங்கும் வானிலை ஆராய்ச்சி மைய அதிகாரி ஒருவர் கூறியதாவது: கோவை மாவட்டம் வடகிழக்கு பருவமழையின் முழ அளவையும் ஏற்கனவே பெற்றுவிட்டது. இந்நிலையில் கடந்த சில

நாட்களுக்கு முன்பு நிகழ்ந்த பருவநிலை மாற்றம் காரணமாக மழையின் விகிதம் குறைந்து பனியின் தாக்கம் அதிகரித்தது. இந்நிலையில் நேற்று முன்தினம் மற்றும் நேற்று இரவு காற்றில் உள்ள ஈரப்பதத்தின் அடர்த்தி அதிகமானதை தொடர்ந்து மழை பெய்துள்ளது. மேலும் இரண்டு நாட்கள் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. கோவை நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் 5.2 மி.மீட்டர் மழை பதிவானது என்றார்.

## அரவக்குறிச்சி பகுதியில் 2மணிநேரம் கனமழை பொதுமக்கள், விவசாயிகள் மகிழ்ச்சி

அரவக்குறிச்சி, : அரவக்குறிச்சி பகுதியில் நேற்று 2 மணிநேரம் பெய்த மழையால் பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். அரவக்குறிச்சி ஒன்றியத்திலுள்ள 20 ஊராட்சிகள், அரவக்குறிச்சி, பள்ளபட்டி உள்ளிட்ட பகுதிகளில் கடந்த மூன்று நாட்களாகவே மேக மூட்டம் காணப்பட்டாலும் மழை பெய்யவில்லை. அதற்கெல்லம் சேர்ந்தார் போல நேற்று மதியம் 3 மணிக்கு திடீரென்று வானில் கரு மேகம் சூழ்ந்து மழை கொட்ட ஆரம்பித்தது. பலத்த இடியுடன் காற்று வீசியது. சிறிது நேரத்தில் சாலையில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. மழை காரணமாக அரவக்குறிச்சி -கரூர் -திண்டுக்கல் நெடுஞ்சாலையில் லாரிகள் உள்ளிட்ட வாகனங்கள் ஊர்ந்து சென்றன. சுமார் 2 மணிநேரத்திற்கும் மேல் பெய்த மழையால் பூமி குளிர்ந்து ஈரக் காற்று வீசியது. இதனால் மதிய நேரத்திலேயே குளிர் மக்களை நடு நடுங்க வைத்தது. மேலும் வானம் மேக மூட்டத்துடனேயே காணப்பட்டு லேசான தூறல் மழை பெய்து கொண்டிருந்தது. இந்த திடீர் மழை காரணமாக அரவக்குறிச்சி ஒன்றியத்திலுள்ள 20 ஊராட்சிகள், அரவக்குறிச்சி, பள்ளபட்டி உள்ளிட்ட பகுதிகளில் பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## <u>உற்பத்தி குறைவால் பூக்கள் விலை கடும் உயர்வு</u>

கரூர், : உற்பத்தி குறைவால் கரூரில் பூக்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. கரூர் மாரியம்மன் பூமார்க்கெட்டுக்கு கரூர் மாவட்டத்தில் வேலாயுதம்பாளையம், நொய்யல், நாமக்கல் மாவட்டம் பரமத்தி, வேலுாீர், திண்டுக்கல் மாவட்டம் பாளையம், குஜிலியம்பாறை உள்ளிட்ட ஊர்களில் இருந்து பூக்கள் விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. தற்போது பனி காரணமாக பூக்கள் விளைச்சல் இல்லை. இதன் காரணமாக மார்க்கெட்டுக்கு பூக்களின் வரத்து குறைந்துவிட்டது. இதனால் பூக்களின் விலை அதிகமாகி விட்டது. பூமார்க்கெட்டில் நேற்று மல்லிகை கிலோ ரூ.700க்கு ஏலம்போனது. முல்லை மற்றும் ஜாதிப்பூ தலா ரூ.400 என விற்பனை செய்யப்பட்டன. மல்லிகைப்பூ நுறு கிராம் ரூ.50 வரை சில்லரை விலையில் விற்பனை செய்யப்படுகிறது. முல்லைப் பூ ரூ.20க்கு விற்பனை செய்யப்பட்டது. கோயில்விழா மற்றும் சுபகாரியங் களுக்காக பூக்களை ஆர்டர் கொடுத்திருந்தவர்கள் பூவுக்காக அதிக தொகையை செலவு செய்யவேண்டியதிருக்கிறது என்றனர். விலை அதிகமாக இருந்தாலும் ஆர்டர் எடுத்து பூக்களை தொடுப்பவர்கள் வேறுவழியின்றி வாங்கிச் சென்றனர். பூக்களை இவ்வளவு அதிக விலைக்கு வாங்கி தொடுத்து விற்பனை செய்யும்போது வருமானம் எதிர்பார்த்தபடி இல்லை என பூவியாபாரிகள் தெரிவித்தனர்.

## <u>பண்டுதகாரன்புதூரில் இலவச செம்மறிஆடு வளர்ப்பு பயிற்சி வருகிற 17ம்தேதி தொடக்கம்</u>

கரூர், : பண்டுதகாரன்புதூரில் உள்ள கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மையத்தில் செம்மறிஆடு, நாட்டுக்கோழி வளர்ப்பு குறித்த இலவச பயிற்சி வரும் 17ம்தேதி தொடங்கி 3 நாட்கள் நடைபெறுகிறது. கரூர் மாவட்டம் பண்டுதகாரன்புதூரில் அமைந்துள்ள கால்நடை பல்கலைக்கழக பயிற்சி

மற்றும் ஆராய்ச்சி மைய வளாகத்தில் நபார்டு வங்கியின் நிதியுதவியுடன், லாபகரமான செம்மறியாடு, வெள்ளாடு, நாட்டுக்கோழிவளர்ப்பு குறித்த இலவச பயிற்சி வரும் 17ம்தேதி முதல் 19ம்தேதி வரை 3 நாட்கள் நடைபெறுகிறது. இப்பயிற்சியில் அறிவியல் ரீதியான ஆட்டினங்களை தேர்வு செய்வது, இனப்பெருக்கம், ஆடுவளர்ப்பில் பராமரிப்பு முறைகளான பரண்மேல் கொட்டகை அமைப்பு, தீவனமேலாண்மை, ஆடுகளுக்கேற்ற பசுந்தீவனஉற்பத்தி, மேய்ச்சல் தரைஅமைப்பு, ஆடுகளை தாக்கும் நோய்கள் அவற்றை தடுக்கும் முறைகள், மூலிகை மருத்துவ சிகிச்சை, அசோலா வளர்ப்பு, மலிவு விலை கலப்பு தீவனம் தயாரித்தல், பண்ணை பொருளாதாரம், விற்பனை உத்திகள், வங்கிக்கடன் உதவி, பண்ணைக்கான காப்பீடு ஆகிய தலைப்புகளில் பல்கலைக்கழக பேராசிரியர்களால் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும் பயிற்சியாளர்களுக்கு ஆட்டுச்சந்தை, மேச்சேரி ஆடு ஆராய்ச்சி நிலையம், கோழிகுஞ்சு உற்பத்தி நிலையம் ஆகிய இடங்களுக்கு ஒருநாள் பட்டறிவு பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பயிற்சியில் கலந்துகொள்ள ஆர்வம் உள்ளவர்கள் முன்பதிவு செய்துகொள்ள வேண்டும். மேலும் மூன்றுநாள் பயிற்சியிலும் தவறாது கலந்து கொள்ள வேண்டும் என்று மையத்தின் இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் அகிலா தெரிவித்துள்ளார்.

## **இறவை நிலக்கடலையில் அதிக மகசூலுக்கு பயிர் எண்ணிக்கை அவசியம் வேளாண் அதிகாரிகள் யோசனை**

அன்னவாசல், : நிலக்கடலையில் கூடுதலான மகசூல் எடுக்க பயிர் எண்ணிக்கையினை பராமரிப் பது அவசியம் என வேளாண் அதிகாரிகள் ஆலோசனை வழங்கியுள்ளனர். இதுகுறித்து வேளாண் இணை இயக்குநர் ஷாஜஹான், குடுமியான் மலை உழவர் பயிற்சி நிலைய துணை இயக்குநர் சாந்தி மற்றும் வேளாண் அலுவலர் ராஜசேகரன் ஆகியோர் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: இறவை நிலக்கடலையில் கூடுதல் மகசூல்

கிடைக்க பயிர் எண்ணிக்கை முக்கியமான காரணியாகும். பயிர் எண்ணிக்கை நிலக்கடலையில் சரியாகப் பராமரிக்கப்படவில்லை என்றால் விவசாயிகள் எவ்வளவு உரம் இட்டாலும் செலவு செய்தாலும் எதிர்பார்க்கும் மகசூல் கிடைக்க வாய்ப்புகள் இல்லை. பயிர் இடைவெளி: பயிர் எண்ணிக்கையைச் சரியாக பராமரிக்க வேண்டுமென்றால் விதைக்கு விதை இடைவெளிவிட்டு விதைப் பது மிக முக்கியமானதாகும். விதை விதைக்கும்போது வரிசைக்கு வரிசை ஒரு அடியும் (30செ.மீ) செடிக்கு செடி 10 செ.மீ இடைவெளியும் இருக்குமாறு விதைக்க வேண்டும். விதைக்கப்படும் விதை 4செ.மீ ஆழத்திற்கு கீழே சென்றுவிடக்கூடாது. இறவை நிலக்கடலை விதைப்பில் ஏருக் குப் பின் விதைப்புச் செய்யும்போது அனுபவம் உள்ள ஆட்களைக் கொண்டு சரியான இடைவெளியில் விதைகள் விழுமாறு விதைப் புச் செய்ய வேண்டும். பயிர்எண்ணிக்கை: நிலக்கடலை விதைக்கப்படும்போது நமக்கு ஒரு ச.மீக்கு 33 கடலைச் செடி கள் கிடைக்கும். இதனை எளிதாக கண்டுபிடிக்க ஒரு பெரிய சைக்கிள் டயருக்குள் 11 செடிகள் இருக்க வேண்டும். அப்போதுதான் நாம் எதிர்பார்க்கும் மகசூல் கிடைக்கும். பயிர் எண்ணிக்கையைச் சீராகப் பராமரிக்கக் கீழ்காணும் வழிமுறைகளையும் பின்பற்ற வேண்டும். தரமான விதை களைப் பயன்படுத்தவேண் டும். தேவையான அளவு விதைப்பருப்பை (ஒரு ஏக்கருக்கு 5,055 கிலோ) பயன்படுத்த வேண்டும். தூய்மை யான, திரட்சியான, பூச்சி நோய் தாக்காத பொறுக்கு விதைகளைப் பயன்படுத்த வேண்டும். விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும். நிலத்தைத் தயார் செய்யும்போது தனிக்கவனம் செலுத்தி நன்கு சமன்செய்ய வேண்டும். விதைப்பில் நன்கு அனுபவமும் பயிற்சியும் பெற்ற நபர்களைக் கொண்டு சரியான இடை வெளி கொடுத்து விதைக்க வேண்டும். எனவே புதுகை மாவட்ட விவசாயிகள் இறவை நிலக்கடலையில் மேற்கண்ட வழிமுறைகளைத் தவறாது கடைப்பிடித்து நிலக்கடலையில் பயிர் எண்ணிக்கையினை சரியாகப் பராமரித்துக் கூடுதல் மகசூல் பெறலாம். இவ்வாறு அதில் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## <u>தவளைப்பள்ளத்தில் கறவை மாடுகளுக்கு தீவன மேலாண்மை களப்பயிற்சி</u>

ஆலங்குடி, : ஆலங்குடியை அடுத்த தவளைப்பள்ளம் கிராமத்தில் வம்பன் வேளாண் அறிவியல் நிலையம் சார்பில் கறவை மாடுகளுக்கு தீவன மேலாண்மை பற்றிய களப்பயிற்சி கால்நடை வளர்போர்களுக்காக நேற்று நடத்தப்பட்டது. இப்பயிற்சியை நிலைய பேராசிரியர் பசுபதி துவக்கி வைத்து பேசியதாவது: புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக கால்நடைகளை வளர்க்கும் தொழில் சிறந்து விளங்குகிறது. அதிக வருமானம் கிடைக்க வேண்டும் என்றால் கால்நடைகளை பராமரிப்பது மிகவும் அவசியம். அவற்றின் ஆரோக்கியம் மற்றும் சத்தான தீவனங்கள் பொருத்தே பால் உற்பத்தி மற்றும் உடல் ஆராக்கியம் நிர்ணயிக்கப்படுகிறது. எனவே, தீவனப்பயிர்கள் சாகுபடி மிக முக்கியமானது மற்றும் பால் அடர்த்தியை அதிகரிக்க டானுவாஸ் தயாரிப்பான தாது உப்பு கலவை நல்ல பலனை தருகிறது என்றார். உதவி பேராசிரியர் நூர்ஜஹான் தீவனப்பயிர்கள் சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து பேசியபோது, கறவை மாட்டிற்கு நாள் ஒன்றிற்கு 25, 30 கிலோ பசுந்தீவனம் தேவைப்படுகிறது. 30 கிலோ பசுந்தீவனம் அளிக்கும்போது 20 கிலோ பயறு வகை மற்றும் தானியவகை மற்றும் புல்வகை பசுந்தீவனமாகவும், 10 கிலோ பயறுவகை மற்றும் மர இலைகளாகவும் இருக்க வேண்டும். பல்லாண்டு பயிர்களான கம்பு நேப்பியர் புல் கோ (சி.என்)4, தீவனசோளம் கோ.எப்.எஸ் 29 மற்றும் கோ31 மற்றும் வறட்சியை தாங்கி வளரக்கூடிய முயல் மசால், வேலி மசால் பயறு வகை புல்களையும் அகத்தி, சூபாப்புல் போன்ற மர வகை பயிர்களையும் பயிரிட்டு பயன்பெறலாம். பயிரிடும் போது 3:1 என்ற விகிதத்தில் புல் வகை மற்றும் பயறு வகை தீவனப் பயிர்களை பயிரிட வேண்டும். மேலும் டானுவாஸ் தாது உப்பு கலவை கறவை மாடுகளுக்கு தினமும் கொடுத்து வந்தால் பால் உற்பத்தி மற்றும் பால் அடர்த்தி அதிகரிக்கும் என்றார். பயிற்சியின் நிறைவில் அனைத்து விவசாயிகளுக்கும் வேலி மசால், முயல் மசால் விதைகள், டானுவாஸ்

தாது உப்பு கலவை மற்றும் தீவனப்பயிர்கள் சாகுபடி தொழில்நுட்பங்கள் பற்றிய கையேடு இலவசமாக வழங்கப்பட்டது.

## 50 சத மானிய விலையில் புகையான் கட்டுப்படுத்தும் மருந்து விநியோகம்அதிகாரி தகவல்

திருத்துறைப்பூண்டி, : புகையான் பூச்சி கட்டுப்படுத்தும் மருந்து 50 சதவீத மானிய விலையில் விற்பனை செய்யப்படுவதாக வேளாண் அதிகாரி தெரிவித்தார். திருவாரூர் மாவட்டம் கோட்டூர் வட்டாரம் பெருக வாழ்ந்தான், மண்ணுக்குமுன்டான், திருத்துறைப்பூண்டி வட்டாரம் காடுவாகொத்தமங்கலம், பனையூர், திருப்பத்தூர், கொத்தமங்கலம், முத்துப்பேட்டை வட்டாரம் தில்லைவிளாகம், பின்னத்தூர், அம்மளூர் கிராமங்களில் புகையான் பூச்சி தாக்கப்பட்ட நெல் வயல்களை மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் நடேசன் தலைமையில் வேளாண்மை அலுவலர்கள் கொண்ட குழு பார்வையிட்டது. பின்னர் வேளாண்மை துணை இயக்குநர் நடேசன் கூறியது: இரவு நேரங்களில் குறைந்த வெப்பமும், பகலில் வானம் மேகமூட்டமாகவும் நிலவும் தட்பவெட்ப நிலை புகையான் பூச்சி பெருகி தாக்குதல் உண்டாக்க ஏற்ற சூழ்நிலை யாகும். நெல்வயல்களில் தொடர்ந்து தண்ணீரை நிறுத்தி வைப்பதால் பயிரின் அடிப்பாகத்தில் குளிர்ந்த தட்பவெட்ப நிலை உண்டாகும். இந்த சூழ்நிலை நிலவும் போது உடனடியாக தண்ணீரை வடித்து, சூரியஒளியும் காற்றோட்டமும் நெற்பயிரின் அடிப்பாகத்திற்கு கிடைக்க கிழக்கு மேற்காக நெற்பயிரை 3 அடி அகலம் கொண்ட பாத்திகளாக பிரித்து விட வேண்டும். புகையான் பூச்சியின் அறிகுறிகள், ஈ போன்ற பழுப்பு நிறமுடைய பூச்சிகள் நெற்பயிரின் அடிப்பாகத்தில் கூட்டமாக இருந்து பயிரின் சாற்றை உறிஞ்சுவதால் இளம்பயிரின் தண்டுகள் வலுவிழுந்து காய்ந்து விடும். கதிர் வந்த நிலையில் தாக்குதல் காணப்பட்டால் தண்டுகள் வலுவழந்து கதிர்கள் பதராகி பயிர் மஞ்சளாகி வட்டாக வட்டமாக தீய்ந்தது போல் காணப்படும். புகையான் பூச்சி தாக்கு தல் காணப்படும் வயல்களில் உடனடியாக தண் ணீரை வடித்து விடவும்.

இளம் பயிராக இருந்தால் தழை சத்து இடுவதை தள்ளி போடவும். புகை யான் பூச்சியை கட்டுப்படுத்த இமிடாக்குளோப்ரிட் 40 மிலி, டிரையஸோபாஸ் 400மிலி, கார்போசல்பான் 400 மிலி, பியூப்ரோபிசின் 325 மிலி இவற்றில் ஏதேனும் ஒரு மருந்துடன் 40 மிலி ஓட்டும் திரவத்தை சேர்த்து 200 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு ஏக்கரில் தெளித்து புகையான் பூச்சிகளை கட்டுப்படுத்த வும். பரிந்துரைக்கப்படும் மருந்து கலவையை புகை யான் இருக்குமிடமான நெற்பயிரின் அடிப்பாகம் நன்கு நனையும்படி தெளிக் கவும். புகையான் பூச்சியை கட்டுப்படுத்த பைரித்திராய்டு மருந்து தெளிப்பதை தவிர்க்கவும். நெற்பயிரை தாக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்த பைரித்திராய்டு மருந்துகளான கராத்தே, ரீவான், நியுரோகோம்பி, புரோபக்ஸ்சூப்பர் மற்றும் சக்தி போன்ற பூச்சி மருந்துகளை விவசாயிகளுக்கு விநியோகிக்க வேண்டாம் என தனியார் பூச்சி மருந்து விற்பனையாளர்கள் கேட்டுகொள்ளப்படுகிறார்கள். மீறி விற்பனை செய்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். புகையான் பூச்சியை கட்டுப்படுத்த புரோபினோ பாஸ் மற்றும் இமிடாக்குளோப்ரிட் மருந்துகள் அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் இருப்பு வைத்து 50 சத மானிய விலையில் விவசாயி களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது என்றார்.

## <u>தேவாரம் மலையடிவாரத்தில் பயிரிட்டுள்ள மொச்சை விவசாயத்தில் தேமல் நோய் கட்டுப்படுத்த வேளாண்துறை விளக்கம்</u>

தேவாரம், : தேவாரம், கோம்பை மலையடிவாரத்தில் பயிரிடப்பட்டுள்ள மொச்சை மற்றும் அவரைக்காயில் தேமல் நோய் ஏற்படாமல் பாதுகாக்க விவசாயிகள் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி வேளாண்மைத் துறை விளக்கம் அளித்துள்ளது. தேவாரம், கோம்பை மலையடிவாரத்தில் பெய்த மழையின் காரணமாக பலநூறு ஏக்கரில் விவசாயிகள் மொச்சை மற்றும் அவரைக்காய் விவசாயம் செய்துள்ளனர். தற்போது நிலவும் தட்பவெப்பநிலை மற்றும் இரவில் ஏற்படும் பனிப்பொழிவின் காரணமாக மொச்சைக்காய் மற்றும் மற்ற பயறுவகைகளில் மஞ்சள் தேமல் நோய் மற்றும் இலைகருகல் நோய் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம்

உள்ளன. இந்த நோய் சாறு உறிஞ்சும் பூச்சிகளான வெள்ளை ஈ, அசுவினி மூலம் பாதிக்கப்பட்ட பயிர்களில் இருந்து மற்ற பயிர்களுக்கு பரவுகிறது. இந்த நோய் தாக்கப்பட்ட பயிர்களில் இலைகள் மஞ்சள் நிறம் அடைந்து செடிகள் மஞ்சளாக காணப்படும். நோய் தாக்கப்பட்ட செடிகளில் பூக்கள் மற்றும் காய்கள் உருவாகாமல் செடி மலட்டுத்தன்மை அடைகிறது. இதன் காரணமாக விவசாயிகளுக்கு மகசூல் இழப்பு ஏற்பட்டு வருமானம் குறையக்கூடிய வாய்ப்புகள் உள்ளன. எனவே இந்த நோயை கட்டுப்படுத்துவது பற்றி உத்தமபாளையம் வேளாண்மைத்துறை உதவிஇயக்குநர் என்ன செய்யவேண்டும் என்பதை விளக்குகிறார். ஸ்ட்ரெப்டோமைசின் - ஏக்கருக்கு 6 கிராம் அதனுடன் தையோ மெத்தக்ஸம் ஏக்கருக்கு 40 கிராம். அல்லது ஸ்ட்ரெப்டோமைசின் ஏக்கருக்கு 6 கிராம் அதனுடன் இமிடாகுளோப்ரிட் ஏக்கருக்கு 100 மில்லி மேற்கண்ட மருந்துகளுடன் கார்பென்டாசிம் ஏக்கருக்கு 250 கிராம் அல்லது டைத்தேன் எம்45, 250 கிராம் என்ற அளவில் கலந்து காலை அல்லது மாலை நேரங்களில் ஒட்டுப்பசை சேர்த்து தெளிக்க வேண்டும். இவ்வாறு தெளித்தால் மஞ்சள்தேமல் நோய் பயறு வகை பயிர்களில் பரவுவதை கட்டுப்படுத்தலாம். இவ்வாறு கூறி உள்ளனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>காஞ்சீபுரத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் 19–ந் தேதி நடக்கிறது</u>**



காஞ்சீபுரம், காஞ்சீபுரம் மாவட்ட கலெக்டர் வி.கே.சண்முகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

காஞ்சீபுரம் மாவட்டத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வருகிற 19–ந் தேதி (வெள்ளிக்கிழமை) காலை 11 மணிக்கு மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்ட அரங்கில் மாவட்ட கலெக்டர் வி.கே.சண்முகம் தலைமையில் நடைபெற உள்ளது. மேற்கண்ட கூட்டத்தில், விவசாயிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு முக்கிய வேளாண்மைத்துறை மற்றும் சார்பு துறைகள் தொடர்பான கோரிக்கை மனுக்கள் அளிக்கலாம். இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய இன செம்மறி ஆடுகள் கண்டுபிடிப்பு 45 கிலோ எடையுடன் இருக்கும்

ஊட்டி ஆராய்ச்சி மையம் மூலம் புதிய இன செம்மறி ஆடுகள் கண்டுபிடிக்கப்பட்டது இது 45 கிலோ எடை யுடன் இருக்கும்.

கருத்தரங்கம்

தமிழ்நாடு கால்நடை மருத் துவ அறிவியல் பல்கலைக் கழ கத்தின் 25-வது ஆண்டு வெள்ளி விழா நடைபெற்று வருகிறது. இதனை முன்னிட்டு ஊட்டி செம்மறி ஆடுகள் இன விருத்தி மையம் மற்றும் தமிழ் நாடு கள ஆடு உற்பத்தி பயன் பாடு கழகம் ஆகியவை இணைந்து ஆடுகள் உற்பத்தி மற்றும் பாதுகாப்பு குறித்த 2 நாள் தேசிய கருத்தரங்கை நடத்தின. ஊட்டியில் நடைபெற்ற கருத்தரங்கிற்கு தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல் கலைக்கழகத்தின் இயக்குனர் டாக்டர் பாபு தலைமை தாங் கினார். இதில் காஷ்மீர் கால் நடை மருத்துவ பல்கலைக் கழகத்தின் முதல்வர் சர்பரஸ் வாணின், மத்திய ஆடு ஆராய்ச்சி மையத்தின் முதன்மை விஞ்ஞானி டாக்டர் சாகேத் பூஷன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் நாடு முழுவதும் இருந்து 70-க் கும் மேற்பட்ட விஞ்ஞானிகள் கலந்து கொண்டனர். 45 மருத்துவ ஆராய்ச்சி மையங்கள் இதையடுத்து, தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல் கலைக்கழகத்தின்

இயக்குனர் டாக்டர் பாபு நிருபர்களிடம் கூறியதாவது:- தமிழ்நாடு கால்நடை பல்கலைக்கழகத் தின் கீழ் 6 கால்நடை மருத்துவ அறிவியல் கல்லூரிகள், 45 மருத்துவ ஆராய்ச்சி மையங் கள் இயங்கி வருகின்றன. இதில் கால் நடைகள் மற்றும் ஆடுகள் குறித்த மருத்துவம், இன விருத்தி குறித்த ஆராய்ச்சி கள் நடை பெற்று வருகிறது. ஆடு பராமரிப்பு மற்றும் அவற்றிற்கு தேவைப்படும் தீவ னங்கள், நோய் தடுப்பு முறை கள், புதிய மருந்துகள் கண்டு பிடிப்பு, அவற்றை சந்தை படுத்துவது குறித்து இந்த கருத்தரங்கில் விவாதிக்கப்படு கிறது. தமிழகத்தில் 6 கோடி செம் மறி ஆடுகளும், 9 கோடி வெள் ளாடுகளும் உள்ளன. ஆடுகள் மூலம் கிராமப்பகுதி விவசா யிகள் அதிகம் பயன் பெறுகின் றனர். தற்போது அதிக இறைச்சி தரக்கூடிய, அதிக எடை மற்றும் 2 முதல் 3 குட்டி கள் போடக்கூடிய வகையில் சைப்ரஸ் நாட்டில் இருந்து உயர்தர விந்துக்கள் வரவழைக் கப்பட்டு பல்வேறு ஆராய்ச்சி கள் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன.

சென்சார்கருவிகள்

மேலும், ஆடுகளின் எடை, உயரம், குட்டி போடும் தன்மை குறித்து அறிந்து கொள்ள ஆடு களின் கழுத்துகளில் சென்சார் கருவிகள் பொருத்தப்படுகிறது. இது சென்னையில் உள்ள பெட்டனேரி ஆராய்ச்சி மையத்தில் முதல் முறையாக செயல்படுத்தப்பட்டு உள் ளது.தமிழக அரசால் இதுவரை 6½ லட்சம் பயனாளிகளுக்கு ஆடுகள் வழங்கப்பட்டு உள் ளன. இதில் 60 சதவீத ஆடுகள் தற்போது குட்டி போட்டு உள்ளன. இதேபோல் மத்திய அரசு மூலம் சிகப்பு ஆண் ஆடுகள் வழங்கப்படுகிறது. இதன் மூலம் பிறக்கும் குட்டி கள் அதிக உடல் எடையுடன், ஆரோக்கிய மாகவும்உள்ளன.

புதியஆடுகள்கண்டுபிடிப்பு

ஊட்டி சாண்டிநல்லா ஆராய்ச்சி மையத்தின் மூலம் சாண்டினோ, பாசேட்ஸ் ஆகிய 2 புதிய செம்மறி இன ஆடுகள் கண்டு பிடிக்கப்பட்டு உள்ளன. இந்த ஆடுகள் 35 கிலோ முதல் 45 கிலோ எடை இருக்கும்.

இது மற்ற செம்மறி ஆடுகளை விட அதிக எடை கொண்டு உள்ளது. மேலும் புதிய கண்டுபிடிப்புகள்காரண மாக ஆடுகளின் இறப்பு சதவீதம் குறைந்து உள்ளது. மேற்கு வங்க மாநிலத்தில் உள்ள ஆடுகளின் மரபணுவை, தமிழகத்தில் உள்ள ஆடுகளின் மரபணுவுடன் இணைப்பது குறித்து ஆராய்ச்சி நடை பெற்று வருகிறது. இந்த ஆராய்ச்சி முடிவடைந்தால் தமிழகத்தில் உள்ள செம்மறி ஆடுகள் 2 முதல் 3 குட்டிகள் வரை போடும். இவ்வாறு அவர் கூறினார். சாண்டிநல்லா ஆராய்ச்சி மையத்தின் தலைமை டாக்டர் அய்யூ உடன் இருந்தார்.

## <u>பெரியகுளம் பகுதியில் மழை: 2–வது முறையாக நிரம்பிய சோத்துப்பாறை அணை</u>



பெரியகுளம், பெரியகுளம் பகுதியில் பெய்த மழையின் காரணமாக சோத்துப்பாறை அணை 2–வது முறையாக நிரம்பியது.

<u>சோத்துப்பாறை அணை</u>

தேனி மாவட்டம், பெரியகுளம் அருகே சோத்துப்பாறை அணை உள்ளது. சோத்துப்பாறை அணையின் கொள்ளளவு 124 அடி. (மொத்த உயரம் 126.28 அடி). இந்த அணையில் இருந்து பெரியகுளம், பாப்பியன்பட்டி, தாமரைக்குளம் ஆகிய கண்மாய்களுக்கு நீர் வரத்து உள்ளது. அதே போன்று புது வாய்க்கால் மூலம் லட்சுமிபுரம், கைலாசப்பட்டி பகுதிகளின் விவசாயத்திற்கும் தண்ணீர் திறந்துவிடப்பட்டு வருகிறது. இந்த கண்மாய்களில் வரும் தண்ணீர் மூலம் சுமார் 2 ஆயிரத்து 932 ஏக்கர் பரப்பளவு விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. இந்த நிலையில் கடந்த அக்டோபர் மாதம் தொடர்ந்து மழை பெய்ததில் சோத்துப்பாறை அணையின் நீர்மட்டம் கிடு,கிடுவென உயர்ந்து அணை நிரம்பி வழிந்தது. இதனை தொடர்ந்து பெரியகுளம் பகுதியில் குடிநீர்

மற்றும் விவசாய பாசனத்திற்காக அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது.

<u>2–வது முறையாக நிரம்பியது</u>

கடந்த 6–ந் தேதி முதல் அணைக்கு நீர்வரத்து குறைந்தது. இதனால் அணையின் நீர்மட்டம் 124 அடியாக குறைந்தது. நேற்று முன்தினம் பெரியகுளம் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்ததால், அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது. நேற்று நிலவரப்படி, அணைக்கு வினாடிக்கு 25 கன அடி நீர் வரத்து இருந்தது. அணை நிரம்பியதால், 25 கன அடி தண்ணீரும் வெளியேறி வருகிறது. அணையில் நீர் இருப்பு 100 மில்லியன் கன அடி உள்ளது. இதனால் அணையின் மொத்த கொள்ளளவும் நிரம்பி வழியத் தொடங்கியது. சோத்துப்பாறை அணை 2–வது முறையாக நிரம்பியதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

<u>ஹைவேவிஸ் அணை</u>

சின்னமனூர் பகுதியில் கடந்த சில நாட்களாக பெய்து வந்த மழை காரணமாக அணைகள் மற்றும் படகு துறை பகுதிகளில் நீர் நிரம்பியது. இதில் ஹைவேவிஸ் அணை தற்போது அதன் முழு கொள்ளவையும் எட்டி நிரம்பி உள்ளது. இதனால் இப்பகுதிக்கு வரும் சுற்றுலா பயணிகள் அணைகளை வெளிபகுதியில் இருந்து நீர் நிரம்பி இருப்பதை கண்டு ரசித்து செல்கின்றனர். மேகமலை பகுதிக்கு வரும் சுற்றுலா பயணிகள் அணைகளின் அழகை வெளியில் இருந்து ரசித்து வருகின்றனர். இதனால் இங்கு வரும் சுற்றுலா பயணிகள் இப்பகுதியில் உள்ள அணைகளின் அழகை கண்டு ரசிக்கும் வகையில் அணைகளுக்கு உள்ளே செல்ல அனுமதி வழங்கபட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

## <u>நெற்பயிரில் குருத்துப்பூச்சி தாக்குதல் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் நேரில் ஆய்வு</u>



பாளையங்கோட்டை வட்டாரத்தில் நெற்பயிரில் குருத்துப்பூச்சி தாக்குதல் காணப்படுகிறது. இதனை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக விஞ்ஞானிகள்ஆய்வுசெய்தனர்.

குருத்துப்பூச்சிதாக்குதல்

பாளையங்கோட்டை வட்டாரத்தில் பிசான பருவ நெற்பயிர் தூர்கட்டும் நிலையில் உள்ளது. முன்னீர்பள்ளம், தருவை, விளாகம் மற்றும் சுற்றுவட்டார கிராமங்களில் நடவு செய்யப்பட்டு உள்ள நெற்பயிரில் தற்போது நிலவும் பனியின் மற்றும் காலநிலை காரணமாக குருத்துப்பூச்சி தாக்குதல் பரவலாக உள்ளது. தாக்குதலுக்கு உட்பட்ட நெற்பயிர் பரப்பை நெல்லை வேளாண்மை இணை இயக்குனர் சந்திரசேகரன் உத்தரவின் பேரில், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக விஞ்ஞானிகள் எம்.ஏ.கே.பிள்ளை, ரஜினிமாலா, வேளாண்மை உதவி இயக்குனர் மகாலிங்கம், முன்னீர்பள்ளம் வேளாண்மை அலுவலர் மாரியம்மாள் ஆகியோர் கொண்ட குழுவினர் ஆய்வு செய்தனர். ஆய்வு செய்யப்பட்ட வயல்களில், இளம்பயிரின் தண்டில் துளையிடுவதால் நடுக்குருத்து வாடி காய்ந்து இருப்பது தெரியவந்தது. இதுகுருத்துபூச்சியின் தாக்குதல் ஆகும். இதனால் பயிரின் வளர்ச்சி குறைந்து காணப்பட்டு உள்ளது.

கட்டுப்படுத்தும்முறைகள்

இந்த பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த கோரோஜன் என்ற மருந்தினை ஏக்கருக்கு 60 மில்லி லிட்டர் அல்லது கார்டாப் ஹைடிரோகுளோரைடு 150–200 கிராம் அல்லது பிப்ரோனில் 300 மில்லி அல்லது இன்டாக்ஸி கார்ப் ஏக்கருக்கு 80 மில்லி வீதம் தெளிக்க வேண்டும். விசைத்தெளிப் பானுக்கு ஏக்கருக்கு 60 லிட்டர் தண்ணீரிலும் கைத்தெளிப்பான் என்றால் 200 லிட்டர் தண்ணீர் வேண்டும். டேங்க் ஒன்றிற்கு ஒட்டும் திரவம் 20 மில்லி என்ற அளவில் கட்டாயம் கலந்து காலை அல்லது மாலை நேரங்களில் தெளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இந்த தகவலை நெல்லை வேளாண்மை இணை இயக்குனர் சந்திரசேகரன் தெரிவித்து உள்ளார்.

<u>மணிமுத்தாறு அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு வினாடிக்கு ஆயிரம் கனஅடி தண்ணீர் வருகிறது</u>



மணிமுத்தாறு அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. வினாடிக்கு ஆயிரத்து 30 கனஅடி தண்ணீர் வருகிறது.

<u>17 ஆயிரம் கனஅடி</u>

நெல்லை மாவட்டம் பாபநாசத்தில் நேற்று முன்தினம் பலத்த மழை பெய்தது. இதனால் நீர்ப்பிடிப்பு மற்றும் நீர்வரத்து பகுதிகளில் இருந்து சுமார் 17 ஆயிரம் கன அடி தண்ணீர் வரை அணைக்கு வந்தது. அவ்வாறு வந்த தண்ணீர் அப்படியே உபரிநீராக வெளியேற்றப்பட்டதால் நேற்றுமுன்தினம் இரவு தாமிரபரணி ஆற்றில் வெள்ளம் கரை புரண்டு ஓடியது. இதனால் ஆற்றின் கரையோரம் இருந்த கோவில்கள், வீடுகள் வெள்ளத்தில் மூழ்கின. குடிநீர் உறை கிணறுகளும் மூழ்கின. இந்த நிலையில் பாபநாசத்தில் நேற்று காலை மழை குறைந்து இருந்தது. இதனால் நீர்ப்பிடிப்பு மற்றும் நீர்வரத்து பகுதிகளில் இருந்து அணைக்கு வரும் தண்ணீர் 7 ஆயிரத்து 649 கனஅடியாக குறைந்தது. அணையின் 3, 4–வது மதகுகள் வழியாக 7 ஆயிரத்து 965 கனஅடி தண்ணீர் உபரி நீராக வெளியேற்றப்பட்டு கொண்டு இருக்கிறது. பின்னர் மாலையில் நீர்ப்பிடிப்பு பகுதியில் மீண்டும் மழை பெய்ய தொடங்கியது. இதனால் பாபநாசம் அணைக்கு 10 ஆயிரம் கனஅடியை தாண்டி தண்ணீர் வந்தது. தொடர்ந்து தாமிரபரணி ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. கீழ் அணையில் 22 மில்லிமீட்டர் மழையும், மேல் அணையில் 157 மில்லிமீட்டர் மழையும் பதிவானது. 157 மில்லிமீட்டர் மழை அளவானது இந்த ஆண்டின் அதிகபட்ச அளவாகும்.

<u>மணிமுத்தாறு அணை</u>

சேர்வலாறு அணையில் எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு நேற்றுமுன்தினம் 205 மில்லிமிட்டர் பதிவானது. சேர்வலாறு அணையின் நீர்மட்டம் நேற்று காலை 7 மணி நிலவரப்படி 147.96 அடியாக உள்ளது. தற்போது அணைக்கு வரும் உபரிநீர் அனைத்தும் அப்படியே வெளியேற் றப்பட்டு கொண்டு இருக்கிறது. மணிமுத்தாறு அணையில் வினாடிக்கு ஆயிரத்து 30 கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது. அணையில் இருந்து 15 கனஅடி தண்ணீர் மட்டுமே வெளியேற்றப்பட்டு கொண்டு இருக்கிறது. 104.80 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம், நேற்று காலை 7 மணி நிலவரப்படி 105.75 அடியாக உயர்ந்தது.

<u>கடனா அணை நிரம்பியது</u>

ஆழ்வார்குறிச்சிக்கு மேற்கே மேற்கு தொடர்ச்சி மலைஅடிவார பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு பலத்த மழை பெய்தது. இதனால் நேற்று முன்தினம் 76.80 அடியாக இருந்த கடனா அணையின் நீர்மட்டம், நேற்று காலை 82.50 அடியாக உயர்ந்தது. ஒரே நாளில் 6 அடி உயர்ந்தது. பின்னர் மாலை 6 மணி நிலவரப்படி 84.20 அடியாக தண்ணீர் அதிகரித்து அணை நிரம்பியது. இந்த ஆண்டில் கடனா அணை 3–வது முறையாக நேற்று நிரம்பி உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. அணைக்கு வினாடிக்கு 830 கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது. 110 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்பட்டது. 79 அடியாக உள்ள ராமநதி அணைக்கு 62 கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருந்தது. 40 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

<u>மழை அளவு</u>

அம்பையில் 33 மில்லிமீட்டரும், கல்லிடைக்குறிச்சியில் 77 மில்லிமீட்டர், சேரன்மாதேவியில் 26 மில்லிமீட்டர் மழையும் பதிவாகி உள்ளது. மேலும் அணைப் பகுதிகளில் மழையின் அளவு குறைந்து உள்ளதால் அணையில் இருந்து வெளியேற்றப்படும் நீரும் படிப்படியாக குறைக்கப்பட்டு வருகிறது. மேலும் விக்கிரமசிங்கபுரம், சிவந்திபுரம், அடையகருங்குளம் பஞ்சாயத்துகளில் நேற்று குடிநீர் வினியோகம் செய்யப்படவில்லை.